செ.வெ.எண்: 17 / பிப்ரவரி நாள் : 09.02.2016

**இராமநாதபுரம் மாவட்டத்தில் தாய்சேய் நல சிறப்பு மருத்துவ முகாம்**
**09.02.2016 முதல் 12.02.2016 வரை நடைபெறவுள்ளது**
**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் 11 தாய் சேய் நல சிறப்பு முகாம்கள் 09.02.2016 முதல் 12.02.2016 வரை நடைபெறவுள்ளது. 09.02.2016 அன்று உச்சிப்புளி, வாலிநோக்கம், கொடிக்குளம் மற்றும் பேரையூர் ஆகிய கிராமங்களிலும், 10.02.2016 அன்று பார்த்திபனூரிலும், 11.02.2016 அன்று மங்களக்குடி, சோழந்தூர், பெரியபட்டிணம், ஏர்வாடி மற்றும் கீழத்தூவல் ஆகிய கிராமங்களிலும், 12.02.2016 அன்று தங்கச்சிமடம், இராமநாதபுரம், சாயல்குடி, பரமக்குடி மற்றும் போகலூர் ஆகிய கிராமங்களிலும் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் சிறப்பு தாய் சேய் நல மருத்துவர்கள் கலந்து கொண்டு கர்ப்பம் மற்றும் குழந்தைகள் நல பரிசோதனைகள் செய்யப்படவுள்ளனர். கர்ப்பிணி தாய்மார்களுக்கு முழு பரிசோதனை செய்யப்படவுள்ளது. மேலும் டி.டி.தடுப்பூசி போடப்படவுள்ளது. 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவம் மேற்கொள்ளப்படும். அனைத்து தாய்மார்களுக்கும் இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை மேற்கொள்ளப்படும். கர்ப்பிணிகளுக்கு இலவசமாக ஸ்கேன் பரிசோதனை செய்யப்படும். டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்ட விண்ணப்பபடிவம் பெறப்படும். கர்ப்பிணிகளுக்கு கணினியில் பிக்மி பதிவு செய்யப்படும். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்ட விபரங்கள் அடங்கிய தகவல் அறிவிப்பு படிவம் (Intimation Slip) வழங்கப்படும்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**